**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 344/2021</u>**

**<u>வழக்கு சாட்சி PW–10</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னத்துரை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | லட்சுமணப்பாண்டியன் | தொழில் | : | உதவி காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | அச்சன்புதூர் | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 10.03.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது அச்சன்புதூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 30.09.2019 ம் தேதி, காலை 08.00 மணிக்கு காவல் நிலையத்தில் பணிபுரியும் முதல்நிலைக்காவலர் அருணாகரன் என்பவர் கொடுத்த தனிஅறிக்கையை பெற்று அதன் தன்மைக்கேற்ப பாவூர்சத்திரம் காவல் நிலைய குற்றஎண்.436/2019, சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 307, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதீமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.13 ஆகும். இது சம்பந்தமாக ஊத்துமலை காவல் ஆய்வாளர் (பொறுப்பு பாவூர்சத்திரம்) அவர்கள் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக 21.03.2020 ம் தேதி வரை பணிபுரிந்தேன். இந்த வழக்கில் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்ட 09.10.2019 வரை ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் பணிபுரிந்த 21.03.2020 ம் தேதி வரை ஆய்வாளர் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்பதினால் தான் என்னுடைய வாக்குமூலம் குற்ற இறுதிஅறிக்கை மற்றும் சாட்சிய பட்டியலில் இடம்பெறவில்லை என்றாலும் சரியல்ல.

அ.சா.1 தனிஅறிக்கை எந்த தேதி, எந்த நேரத்தில் கொடுத்தார் என்று காவல்நிலைய பொதுநாட்குறிப்பில் இடம்பெற்றிருக்கும் என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கை காளம் 3 சி–யில் பொதுநாட்குறிப்பு விபரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பில் உள்ள விபரங்கள் இந்த வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதினால் தான் பொதுநாட்குறிப்பு விபரங்கள் முதல்தகவல்அறிக்கையில் இடம்பெறவில்லை என்றால் சரியல்ல.

பாவூர்சத்திரம் காவல்நிலையத்திற்கும், தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே சுமார் 10 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். இருசக்கரவாகனத்தில் 10 நிமிடங்களில் வந்துவிடலாம் என்றால் 20 நிமிடங்கள் ஆகும். முதல்தகவல்அறிக்கையில் காளம் 15 ல் நீதிமன்றத்திற்கு முதல்தகவல்அறிக்கை அனுப்பப்பட்ட நேரம் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். தென்காசி நீதித்துறை நடுவர்

நீதிமன்றத்திற்கு முதல்தகவல்அறிக்கை 30.09.2019 அன்று இரவு 09.30 மணிக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. முதல்தகவல்அறிக்கையானது 13.00 மணி நேரம் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான குறிப்பிட்ட காரணம் இல்லை.

சம்பவயிடத்திலிருந்து பாவூர்சத்திரம் காவல்நிலையம் 2 கி.மீ தூரத்தில் உள்ளது. இருசக்கரவாகனத்தில் சுமார் 5 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் சரிதான். பாவூர்சத்திரம் காவல்நிலையத்திலிருந்து அருணாப்பேரிக்கு 5 நிமிடங்களில் சென்று விடலாம் என்றால் சரிதான். தனிஅறிக்கை 10 மணிநேரம் காலதாமதத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தனிஅறிக்கையில் அருணாப்பேரிக்கு அவசரமான பணிக்கு சென்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அ.சா.1 ஐயும், அ.சா.2 ஐயும் 10 நிமிடங்கள் அரசுப்பணி செய்யவிடாமல் தடுத்ததாக அ.சா.1 தனிஅறிக்கையிலோ, முதல்தகவல்அறிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன நாளில், நேரத்தில் அ.சா.1 டமிருந்து எந்த தனிஅறிக்கையும் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் நடைபெறும் தவறுகள் சம்பந்தமாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுப்பார்கள் என்றாலும், அதனால் பாவூர்சத்திரம் காவல்நிலைய போலீசாருக்கு எதிரிகள் மீது கோபம் இருந்தது என்றாலும், எதிரிகளை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட தனிஅறிக்கைகள் பெறப்பட்டு அவைகள் இந்த வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் எங்கள் மேலதிகாரிகளின் ஆலோசனையின் பேரில்

அவைகள் மறைக்கப்பட்டு பின்யோசனை செய்து ஒரு பொய்யான தனிஅறிக்கையை அ.சா1 டமிருந்து பெறப்பட்டு, முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அதற்கு சாதகமாக எனது மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.11 11:30:27 +0530